[திரு. ஜே. எஸ். இராசு] [1981 ஏப்ரல் 22

அதாவது 20, 30 ரூபாயையே மாதாமாதம் பெறுகிறார்கள். எனவே, 36 தவணைகளாகத் திருப்பிச் செலுத்தும் இக்கடனை 60 தவணைகளாக ஆக்கித் தருமாறு கேட்டிருக்கிறார்கள். இதனைக் கொஞ்சம் கருணையோடு அனுதாபத்தோடு கூட்டுறவு இலாகா கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, அங்கே வேலைசெய்து, பணியாற்றுகின்றவர்கள் இறந்துவிட்டால், அவர்கள் குழந்தைகள் 8-வது படித்திருக்க வேண்டுமென்ற திட்டம் தேவையற்றது. அவர்கள் எந்த அளவுக்குப் படித்திருக்கிறார்களோ, அதற்கேற்ப வேலை தருவதற்கான உத்தரவை நீங்கள் போடவேண்டும் என்று கூறிக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு அமைச்சர் நாளை பதில் அளிப்பார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றது. நாளை 23—4—1981 ஆம் தேதி காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

259. சென்னை நகர 15.4 திட்டமிடுதல் பிரிவின் கோட்டூர் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தினை வெளியிடுவது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 22—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1232 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

260. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதியிடப்பெற்ற 273 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

1981 ஏப்ரல் 22]

261. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதியிடப்பெற்ற 427 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

262. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் துணை நிறுவனமான தமிழ்நாடு சிமென்ட் (நிறுவனத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகள் தமிழ்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

155. கோரிக்கை எண். 31—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82 (தமிழ்-ஆங்கிலம்).

156. கோரிக்கை எண். 31— ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் இணைப்புகள், 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

157. கோரிக்கை எண். 44—எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981-82. (தமிழ், ஆங்கிலம்).

158. 1980-81-ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறையின் சாதனைத் திட்டம். (ஆங்கிலம்).